திரு. கோ. சி. மணி : கனம் சபாநாயகர் அவர்களே, அங்கேயுள்ளவர்கள் தெரிவித்த கருத்தைப் போலீஸ் கேட்டு, அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் நான் கேட்டேன். நியாயமான கூலி, அடிப்படைக் கூலி நிர்ணயம்.

கனம் சபாநாயகர் : அந்தக் கேள்வி இதிலே வராது. நியாயமான கூலி எவ்வளவு என்பதெல்லாம் இதில் வராது. அதற்கு வேறு கேள்வி போடுங்கள்.

திரு. கோ. சி. மணி : துணைக் கேள்வி போட்டால். . . .

கனம் சபாநாயகர் : துணைக் கேள்வி போட்டால்கூட இதில் வராது.

திரு. கோ. சி. மணி : விவசாயிகள் அதிகக் கூலி கேட்டு, அவர்களுக்குக் குறைத்து கூலி கொடுத்து, அதற்காக போலீஸ் அனுப்பப்பட்டு . . .

கனம் சபாநாயகர் : கூலி நியாயமா இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டியது ஹோம் டிபார்ட்மெண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : லேபர் டிபார்ட்மெண்ட்.

கனம் சபாநாயகர் : அதைக் கவனிப்பது லேபர் டிபார்ட்மெண்ட். The hon. Member may therefore put a separate question for that. Here the question is whether the Police were used unnecessarily or illegally or not?

திரு. ஆ. கு. சுப்பையா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது உழவர்கள் கலவரம் செய்கிறார்கள், அதற்காக அனுப்பப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எதற்காகக் கலவரம் செய்கிறார்கள் என்று சொல்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : உழவர்கள் யாரும் கலகம் செய்யவில்லை. என்னைக்காட்டிலும் உழவர்களிடத்திலே அன்புள்ளவர்கள் யாரும் இல்லையென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கள்ள நோட்டுகள்

***368 கேள்வி.—திரு. ர. ஜீவரத்தினம்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூரில் 1966 மே முதல் வாரத்தில் கள்ள நூறு ரூபாய் நோட்டுகள் ஏதேனும் பிடிபட்டனவா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

3rd November 1966]

திரு. எஸ். முருகையன் : அந்த வழக்கிலே எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? இது சம்பந்தப்பட்டவர்கள் யாராவது தலைமறைவாக இருக்கிறார்களா? அவர்களைக் கைது செய்யக்கூடாது என்று உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தலைமறைவாக இருக்கிறார்கள் என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. கைது செய்யக்கூடாது என்று தகவல் கொடுக்கவில்லை.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த கள்ள நோட்டு அடிப்பது என்பது 100 ரூபாயிலிருந்து 2 ரூபாய் வரைக்கும் வந்து நாயனம் வரைக்கும்கூட பெருகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு என்ன முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாதிரித் திருட்டு நோட்டுகள் அச்சடிப்பது கண்டுபிடிக்கப்பட்டு அங்கங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்கு லைஃப் சென்டன்ஸ் கொடுக்க வேண்டுமென்றும், பெரிய தண்டனை விதிக்கவேண்டுமென்றும் அரசாங்கத்திலே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எவ்வளவு தூரம் இதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதிலே அதிக அக்கறை எடுத்து அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இரண்டு பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் யார் யார் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : The case is under investigation. இந்தச் சமயத்தில் பெயர்கள் சொல்வது நல்லதல்ல.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த வழக்கிலே கைப்பற்றப்பட்ட நோட்டுகள் எவ்வளவு அல்லது எவ்வளவு நோட்டுகளை அச்சடித்து விநியோகித்திருக்கிறார்கள் என்ற ஆதாரமாகிலும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? கோயம்பத்தூர் நோட்டுகள் சம்பந்தமாக, எல்லா நோட்டுகளும் செல்லும் என்று கிருஷ்ணன் வழக்கிலே சொன்ன மாதிரி இந்த நோட்டுகளும் செல்லும் என்று அரசாங்கம் அறிவிப்புச் செய்துவிட்டதா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் ஒரு நீண்ட கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கோயம்பத்தூர் பற்றியெல்லாம் கேட்கிறார்கள். தனியாகக் கேள்வி போடலாம்.

திரு. சா. கணேசன் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்பொழுது கோர்ட்டில் வழக்கு இருப்பதால் இந்தக் கேஸில் கைது செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர்களைச் சொல்லமுடியாது என்று சொன்னார்கள். அவர்களுடைய பெயரைச் சொல்வது எந்த விதத்திலும் கோர்ட்டை அவமதித்ததாகாது. ஏற்கனவே அவர்களையெல்லாம் அரஸ்ட் பண்ணியாகிவிட்டது. ஆகவே, இன்னார்

இன்னார் என்று பெயர்களை அறிவிப்பது சட்ட விரோதமல்ல என்பதை கனம் சபாநாயகர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அவர்களுடைய பெயர்களைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : கோர்ட்டில் இருக்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை; இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்று சொன்னார்கள். Revealing the names may impede investigation. If the persons' names are given, their associates somewhere else may abscond.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் இரண்டு பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மேலும் அந்த வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது என்றும் சொன்னார்கள். வேலூர் நகரத்திலே தெரிந்த உண்மையாக அது இருக்கலாம். இன்னார் இன்னார் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சட்ட மன்றத்திலே சொல்லவில்லை. ஆகவே, அந்த இரண்டு பேர்களும் இந்த அமைச்சரவைக்கு வேண்டியவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இதில் ஸ்பீக்கர் பதில் சொல்ல முடியாது. யார் யாருக்கு வேண்டியவர்கள் என்று சொல்ல முடியாது. நேம்ஸ் தெரிந்திருக்கலாம். ஆனால் அதை ரிவீல் பண்ணுவது இன்வெஸ்டிகேஷனுக்கு இடைஞ்சலாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். கட்டாயப்படுத்தித் தெரிவிக்கவேண்டும் என்று சொல்வதற்கு அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்தக் கேள்வியை இதோடு விட்டுவிடுவது நல்லது.

திரு. கரு. சீமைச்சாமி : கள்ள நோட்டு அச்சடிப்பது என்பது சர்வ சாதாரணமான நிர்ழ்ச்சிகளாக ஆகிவிட்டன. யார் யாரோ செய்துகொண்டிருக்கிறார்கள், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது, கடமையிலிருந்து தவறிவிட்டது என்பதை ஒப்புக்கொள்கிறார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் கடமையில் தவறவில்லை. கொலை செய்யக்கூடாது என்று சொன்னாலும் எவனாவது ஒருவன் போகிற போக்கில் கொலை செய்துவிடுகிறான். திருட்டு நோட்டுகள் சம்பந்தமாக உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது, ஜெயில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. கோ. சி. மணி : அந்த இரண்டு பேர்களும் அச்சடித்ததாகச் சொல்லப்படும் கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டது எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : மூன்று நூறு ரூபாய் நோட்டுகள்.

3rd November 1966]

திரு. ஆ. துரையரசன் : நோட்டு அச்சடிப்பது கடுமையான குற்றம் என்பதால் நோட்டு அடிப்பவர்கள் கைது செய்யப்பட்டு ருசிப்பிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கின்ற அளவுக்கு சட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது ஆயுள் தண்டனை கொடுக்கப்படுகிறது. மரண தண்டனை விதிப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லை. அதைப்பற்றி பின்னால் பரிசிலனை செய்யலாம்.

கனம் சபாநாயகர் : இதற்குத் தனி "ஆக்ட்" கொண்டுவர வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : கள்ள நோட்டு அச்சடித்தவர்கள் சிறை சென்றுவிட்டு வந்தாலும்கூட அவர்கள் தங்களுடைய சொத்தை வைத்துக்கொண்டு வாழலாம் என்ற காரணத்தாலே தயங்காமலே தைரியமாக இந்தக் கள்ள நோட்டு அச்சடிப்பதிலே இறங்குகிறார்கள். ஆகவே, அவர்களைத் தண்டிப்பதுடன் அவர்களுடைய பழைய சொத்துக்களையும் பறிமுதல் செய்வதற்கு ஒரு சட்டத் திருத்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

MR. SPEAKER : It is only a suggestion.

திரு. ப. உ. சண்முகம் : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் கைது செய்யப்பட்டவர்கள் சிறையிலே இருக்கிறார்களா அல்லது ஜாமீனில் வெளியே விடப்பட்டிருக்கிறார்களா? 9-30

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஒரு குற்றத்தின்கீழ் ஒருவரைக் கைது செய்தார்கள் என்றால் அரசியல் சட்டப் பிரகாரம் 24 மணி நேரத்திற்குள்ளாக ஜுடீஷியல் ரிமாண்டில் வைத்து விடவேண்டும். கைது செய்து இரண்டு பேர்களையும் மாஜிஸ்ட்ரேட்டிடம் கொண்டு வந்து ஜுடீஷியல் ரிமாண்டில் வைத்ததற்குப் பிறகு அந்த இன்ஃபர்மேஷன் பப்ளிக் இன்ஃபர்மேஷன் சட்ட சபையில் அமைச்சர் அவர்கள், அந்த இரண்டு பேர்கள் யார் என்று சொல்வதற்குத் தயங்குகிறார்கள் என்றால் இந்தச் சட்ட சபையில் அவருக்குத் தெரிந்த செய்தியை, பொது மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கக்கூடிய செய்தியை, சொல்வதற்குத் தயங்குகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? அப்படிச் சொல்ல மறுக்கிறார்கள் என்றால் இந்த இன்ஃபர்மேஷனை வித்ஹோல்ட் செய்வதன் மூலம் இந்தச் சபையை கனம் அமைச்சர் அவர்கள் அவமதிக்கிறார்கள் என்ற ப்ரிவிலேஜ் மோஷனை தயவுசெய்து சபாநாயகர் அவர்கள் அனுமதிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அமைச்சர் அவர்கள் மூன்று கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டுமா?

[3rd November 1966

திரு. எஸ். ஜே. ராமசாமி : கைது செய்யப்பட்டவர்களின் பெயர்களைச் சொல்ல அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்கள். எந்த ஊரில் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை யாவது அறிவிப்பார்களா?

MR. SPEAKER : Will the Hon. Minister kindly say whether the names of those persons are available with him now?

கனம் திரு. பூ. கக்கன் : பெயர்களைச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை. அதனால் சில பேர்கள் இவர்கள் அகப்பட்டுக்கொண்ட தால் தப்பித்துக் கொள்வார்கள். மேலும், இது இன்வெஸ்டி கேஷனில் இருப்பதால் சொல்லாமல் இருக்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

கனம் சபாநாயகர் : பப்ளிக்காக ஒருவரை அரெஸ்ட் செய்து கோர்ட்டுக்கு ரிமாண்டுக்கு வந்தால் எல்லோருக்கும் தெரியும், அந்தத் தகவலை ஏன் சொல்லக் கூடாது என்று கேட்கிறார்கள். அதற்கு ஏதாவது சொல்கிறீர்களா?

கனம் திரு. பூ. கக்கன் : இவர்கள் பெயர்களைச் சொல்லிவிட்டால் இவர்களோடு சேர்ந்திருப்பவர்கள் சிலர் மறைந்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சொல்லவில்லை.

திரு. சா. கணேசன் : பெயர்கள் பத்திரிகையில் வந்தாகிவிட்டது.

கனம் சபாநாயகர் : அப்படிப் பத்திரிகையில் வந்திருந்தால் ஏன் கேட்கிறீர்கள்?

திரு. சா. கணேசன் : பலர் பார்க்காமல் இருக்கலாம். அதை இனிமேலும் சட்டசபையில் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமா என்று கேட்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பத்திரிகையில் வந்திருக்கிறது என்றால் என்ன வந்திருக்கிறது என்று கேட்டால், வேண்டுமானால் பார்த்துச் சொல்லலாம். என்னென்ன தகவல்கள் கொடுப்பது, என்னென்ன கொடுப்பதில்லை என்ற ஒரு முறை இருக்கிறது. பரிசீலனையில் இருக்கும்போது சில தகவல்களைக் கொடுத்தால் அது பாதிக்கப்படும் என்ற வகையில் பெயர்களைச் சொல்ல மறுக் கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

கூட்டுறவு பாங்கு கட்டடங்கள்

***374 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை State Co-operative Bank -ல் இருந்து ரூ. 40 லட்சம் செலவிட்டு புதிய கட்டடம் ஒன்று கட்டவேண்டும் என்று கோரி அரசுக்கு விண்ணப்பம் அண்மையில் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?